ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2108/66 - 2019 පෙබරවාරි 01 වැනි සිකුරාදා - 2019.02.01

*2108/66 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் கட்டளையிடப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் தொழில் ஆணையாளர் ஏ. விமலவீர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு ஏற்ப மேலே கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொடர்பாகக் கீழ்க் காணப்படும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச சம்பள அளவு முன் வைக்கப்பட்டுள்ளது என மேலே கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தொழில் ஆணையாளர்.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
2019, சனவரி 18.

G29396- 202 (2019/ 02)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

தொழில் ஆணையாளரால் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த வேதனத்திற்காக 1980 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 94/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் கடைசியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1794/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள் அவ்வட்டவணைக்குப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

Iஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்குப் பொருத்தமான நேர வேலைக்கான கீழெல்லைச் சம்பள வீதங்கள் அவர்களுக்கெதிராக II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாறிருத்தல் வேண்டும்.

| நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>சாதாரண வேலை நாள் ஒன்றுக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| (அ) ஊதலுருவம் செய்வோர், இயந்திரங்கள் இயக்குவோர் | 675.00 |
| (ஆ) இயந்திரங்கள் இயக்குவோருக்கு உதவுவோர், குமிழ் உருவம் செய்வோர், வெட்டுவோர், ஊதலுருவம் செய்வோருக்கு உதவுவோரும் சூளையாளருக்கு உதவுவோரும் | 600.00 |
| (இ) உருக்கி மட்டஞ் செய்வோர், வாயு செலுத்துவோர், அழுத்துநர், குமிழ் உருவம் செய்வோருக்கு உதவுவோர் | 570.00 |
| (ஈ) கனிஷ்ட குமிழ் உருவம் செய்வோர், உருவத்தினை சமநிலை செய்வோர், கடைச்சற்காரர், எண்ணுவோர் | 550.00 |
| (உ) கண்ணாடி வெட்டுவோர், சிமினி வெட்டுவோர், மட்டமாக்குவோர் | 530.00 |
| (ஊ) அடுக்கிக் கட்டுவோர், கொண்டு செல்வோர் | 500.00 |

02-597/1

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் கட்டளையிடப்பட்டு 2000 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 1120/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு தொழில் ஆணையாளர் ஏ. விமலவீர ஆகிய நான், ஆரம்பப் பாடசாலை சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், உதவியாளர்கள் தொடர்பாகக் கீழ் காணப்படும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள அளவினை அக் கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என, அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வுத்தேச தீர்மானம் தொடர்பாக காணப்படும் ஆட்சேபனைகள் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் அவ்வாட்சேபனைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றினை உடையதாய் எழுத்து வாயிலாகச் செய்யப்படுதல் வேண்டும்.

ஏ. விமலவீர
தொழில் ஆணையாளர்.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,

*2019, சனவரி 18.*

**அட்டவணை**

தொழில் ஆணையாளரால் ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில் தொடர்பாக ஆசிரியர்கள், உதவியாளர்களுடைய நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பளம் தொடர்பாக 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1556/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணப்படும் அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

| முதலாவது நிரல் (பிரதேசம்) | இரண்டாவது நிரல் (தொழில்) | மூன்றாவது நிரல் (ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம்) |
|---|---|---|
| மாநகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 13,500.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 11,500.00 |
| நகர சபை எல்லையினுன் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 12,750.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 11,500.00 |
| பிரதேச சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 11,250.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 10,000.00 |

மேலே (ஆ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளும், மேலே (அ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளுடன் தொடர்புடைய வேறு யாதாயினும் சேவைகள் இருப்பின் அவைகளும் இதில் அடங்கும்.

*02-597/2*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதிய 1916/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு தொழில் ஆணையாளர் ஏ. விமலவீர ஆகிய நான், பீடி உற்பத்தித் தொழில் துண்டு வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள அளவினை அக் கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என, அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் அவ்வாட்சேபனைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றினை உடையதாய் எழுத்து வாயிலாகச் செய்யப்படுதல் வேண்டும்.

ஏ. விமலவீர
தலைவர்,
பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
*2019, சனவரி 18.*

**அட்டவணை**

பீடி உற்பத்தி தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11208 ஆம்

இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையின் II பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**II ஆம் பாகம்**

**துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

பீடீ சுருட்டுவதற்குத் (பீடி சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல், சுற்றும் இலைகளை வெட்டுதல், சுற்றிலைகளுள் "பீடிப் புகையிலையை" நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட) துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | | ரூ.ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 400.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 450.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 490.00 |

பீடி சுருட்டுவதற்குத் (சுற்றிலைகளுக்கள பீடிப் புகையிலையை நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட ஆனால் சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தலும் கற்றும் இலைகளை வெட்டுதலும் நீங்கலாக) துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | | ரூ.ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 300.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 340.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 375.00 |

(சுருட்டுவதற்கு சுற்றிலைகளைத் தயாரித்தல் உட்பட) சுற்றும் இலைகளை வெட்டுதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | | ரூ.ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 200.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 220.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 230.00 |

சுருட்டிய பீடிகள் சுற்றி வட்ட நாம விலாசம் ஒட்டுவதற்கு துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம் 1000 பீடிகளுக்கு 50.00 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

02-597/3

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**மதுபானம் மற்றும் வினாகிரி தொழிலுக்கான சம்பளச் சபை**

மதுபானம் மற்றும் வினாகிரித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டு சபையின் அத்தகைய முடிவுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள

*முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் அவ்வாட்சேபனைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றினை உடையதாய் எழுத்து வாயிலாகச் செய்யப்படுதல் வேண்டும்.*

ஏ. விமலவீர
தலைவர்,
மதுபான மற்றும் வினாகிரித் தொழிலுக்கான சம்பளச் சபை.

*தொழிற் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2019, சனவரி 18*

**அட்டவணை**

*மதுபானம் மற்றும் வினாகிரித் தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டு 1946 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதிய 9560 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளவும், காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டனவும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய 1803/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக மாற்றப்பட்டனவுமான முடிபுகள் அட்டவணையின் IIஆம், IIIஆம் பாகங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகங்களை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.*

II ஆம் பாகம்

*மதுபான, வினாகிரித் தொழிலின் பின்வரும் செய்முறைகளுக்குப் பொருத்தமான துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதங்கள்*

| செய்கை முறைகள் | | சம்பள வீதங்கள் ரூபா சதம் |
|---|---|---|
| தென்னை மரங்களைத் தொடுத்தல் | ஒவ்வொரு தரமும் தொடுக்க | 78.00 |
| கயிறுகளை மாற்றுதல் | ஒவ்வொரு தரமும் தொடுக்க | 38.00 |
| கயிறுகளை வெட்டுதலும் நீக்குதலும் | ஒவ்வொரு தரமும் தொடுக்க | 33.00 |
| மரங்களுக்கு சட்டம் கட்டுதல் | ஒவ்வொரு கயிறும் தொடுத்தல் 110 மரங்களுக்கு மேற்படாதவிடத்து (தோப்பு) | 3938.00 |

*தவறணைகளுக்கு கள்ளு விநியோகிப்பதற்காக தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களைச் சீவுதல்*

| | ரூபா சதம் | |
|---|---|---|
| காலி மாவட்டத்தில் | 61.00 | தொழிலாளியினால் வழங்கப்படும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் |
| மேல் மாகாணத்தில் | 129.00 | |
| சிலாபம் மாவட்டத்தில் | 122.00 | |
| நுவரெலியா அல்லது கண்டி மாவட்டத்தில் | 135.00 | |
| மாத்தறை, யாழ்ப்பாணம் அல்லது மாத்தளை மாவட்டத்தில் | 122.00 | |
| புத்தளம், அநுராதபுரம், குருநாகல் அல்லது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் | 129.00 | |
| பதுளை அல்லது இரத்தினபுரி மாவடட்டத்தில் | 135.00 | |
| மட்டக்களப்பு அல்லது மன்னார் மாவட்டத்தில் | 135.00 | |
| கேகாலை மாவட்டத்தில் | 90.00 | |

| | | |
|---|---|---|
| திருகோணமலை அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் | 117.00 | தொழிலாளியினால் வழங்கப்படும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் |
| வடிசாலைக்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு அல்லது கள்ளு விநியோகித்தற் பொருட்டு, தென்னை கித்துல், பனை மரங்களைச் சீவுதல் - தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் | 28.00 | |
| வடிசாலைக்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு அல்லது கள்ளு விநியோகிக்கும் பொருட்டு பூவைச் சீவுதல் | 3600.00 | |
| 100 க்கு மேற்படாத மரங்களுக்கு | | |
| 100 இற்கு மேற்பட்ட ஒவ்வொரு மரத்திற்கும் | 38.00 | |
| தவறணைகளுக்கு கள்ளு விநியோகிப்பதற்காகப் பூவைச் சீவுதல் | | |
| 25 முதல் 40 வரையுள்ள தென்னை, கித்துல், பனை மரங்களுக்கு | 3435.00 | |

தம்மாற் கொடுக்கப்படும் கள்ளு (கன வீதம்) நூற்றுக்கு 7.5 % ற்குக் குறையாத மதுசாரம் சத்துக் கொண்டதாய் இருத்தல் வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கமையவே சாராயத் தொழிலுக்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு கள்ளு சேகரிப்பதற்காக அமர்த்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்கள் சீவுவதற்கென மேலே கூறிய வீதங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவ்வகைக் கள்ளிலுள்ள மதுசாரம் (கனவீதம்) நூற்றக்கு 7.5 % வீதத்திற்குக் குறைய இருந்தால் அவ்வகைக் கள்ளிலுள்ள மதுசாரம் வீதத்திற்கும் 7.5 % ற்கும் என்ன தகவுப் பொருத்தம் இருக்கிறதோ அதே தகவுப் பொருத்தம் அக்கள்ளினைச் சேகரித்த தொழிலாளருக்கு கொடுபடும் பணம் மேற்குறிப்பிட்ட வீதத்தில் இருத்தல் வேண்டும்.

## III ஆம் பாகம்

நிரல் I இல் குறிக்கப்பட்ட தொழிலாளர் வகுப்பிற்கு நேர வேலைக்கு இயைபுடைய கீழெல்லைச் சம்பள வீதங்கள் அவ்வத் தொழிலாளர் வகுப்பிற்கு நேரே II ஆம் நிரலில் குறிக்கப்பட்ட வீதங்களாயிருத்தல் வேண்டும்.

எந்த மாதத்திலேனும் தொழிலாளி ஒருவர் அனுமதியின்றி நான்கு (4) நாட்களுக்கு மேற்பட்ட நாட்களுக்கு வராதவிடத்து அனுமதிக்கப்பட்ட நான்கு நாட்களை விஞ்சுகின்ற நாட்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கமைவாக ஒரு தொகையை மாதச் சம்பளத்திலிருந்து கழிவு செய்தபின் மிகுதிச் சம்பளம் கொடுக்கப்படல் வேண்டும்.

| *நிரல் I*<br>*தொழிலாளர் வகுப்பு* | *நிரல் II*<br>*மாத வீதங்கள்*<br>*ரூபா சதம்* |
|---|---|
| பின்வரும் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் | |
| தோப்புக் கண்காணியின் வேலை | 17,130.00 |
| கள்ளுத் தவறணைக் காவலாளியின் வேலை | 14,580.00 |
| சாராயத் தவறணைக் காவலாளியின் வேலை | 14,580.00 |
| தோப்புக் காவலாளியின் வேலை | 13,972.00 |
| சேகரிக்கும் நிலைய முகாமையாளர் வேலை | 15,675.00 |
| தவறணைகளில் கள்ளு விற்கும் வேலை | 15,472.00 |
| தவறணைகளில் சாராயம் விற்கும் வேலை | 15,472.00 |
| தொழிலின் கள்ளுப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேகரித்தல் (கள்ளுக் கொண்டு போதல், ஏற்றுதல் இறக்குதல், பீப்பாக்கள், கள்ளுச்சாடிகள், உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கழுவுதல் ஆகிய வேலைகள் உட்பட) | 15,675.00 |
| தொழிலின் வினாகிரிப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேகரித்தல் (ஏற்றிச் செல்லல் உட்பட) | 14,100.00 |
| வடிசாலையில் கள்ளைக் காய்ச்சி வடித்தல் | 14,655.00 |
| போத்தல்களில் சாராயம் விடுதலும் அடைத்தலும், நாமவிலாசம் ஒட்டுதலும் விறகு வெட்டுதலும் பிளத்தலும், வடிசாலையில் பீப்பாக்கள், கழுவும் பாத்திரங்கள், வடிபாத்திரங்கள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்தலும் கழுவுதலும், | 13,972.00 |

| *நிரல் I*<br>*தொழிலாளர் வகுப்பு* | *நிரல் II*<br>*மாத வீதங்கள்*<br>*ரூபா சதம்* |
|---|---|
| சாராயப் போத்தல் ஏற்றுதலும் இறக்குதலும், சாராயம் அளத்தல், போத்தலில் கள்ளு விடுதலும், அடைத்தலும், வினாகிரி தயாரித்தல், போத்தலில் வினாகிரி விடுதலும் அடைத்தலும் நாம விலாசம் ஒட்டதலும், வினாகிரியை விநியோகிப்பதற்காக ஏற்றுச் செல்லுதல் | 13,972.00 |
| தொழிலின் சாராயப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேகரித்தல் (ஏற்றிச் செல்லும் வேலை உட்பட) | |
| 80 இற்கு மேற்படாத மரங்களுக்கு | 14,460.00 |
| 81இற்கு குறையாதனவும் 90 இற்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 14,662.00 |
| 91 இற்கு குறையாதனவும் 100 இற்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 14,865.00 |
| 101 இற்கு குறையாதனவும் 110 இற்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 15,067.00 |
| 111 இற்கு குறையாதனவும் 120 இற்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 15,270.00 |
| 121 இற்கு குறையாதனவும் 130 இற்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 15,472.00 |
| 131 இற்கு குறையாத மரங்களுக்கு | 15,675.00 |

02-597/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.